Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 2, Issue - 1, November 2022** **E-ISSN: 2583-0481**

# Thakkan Velvi

**S. Kalpana,** Research Scholar of Tamil,
Dharmapuram Adhinam Arts College, Dharmapuram, Mayiladuthurai, Tamil Nadu, India.
**ORCiD:** **https://orcid.org/0000-0001-6010-8716**
**Dr. M. Navamani**, Assistant Professor of Tamil,
Adhinam Arts College, Dharmapuram, Mayiladuthurai, Mayiladuthurai, Tamil Nadu, India.
**ORCiD:** **https://orcid.org/0000-0002-4803-3237**
**DOI: 10.5281/zenodo.7397179**
**Received:** 17 July 2022; **Revised:** 21 August 2022; **Accepted:** 23 August 2022; **Available online:** 26 November 2022.

## Abstract

*It is religion that matures and guides human society. Religious concepts are not easily grasped by people who are steeped in ignorance. Therefore, illustration through simple stories is the norm. Thus the Velvi of Thakkan is the best evidence in the world of Saivism. It is to highlight that high devotion and love is destroyed by arrogance and to realize that God is merciful in any situation. Pharani Ottakoothar brings this story to the rise of Saivism and creates religious awareness. The human mind is capable of wanting to get what it wants. Along with that, he thinks that he is great. Self-esteemed and immersed in ignorance, it is unable to cut off the birth and continues to suffer. Therefore, Saivism prioritizes elimination of egoism. Those who live arrogantly will be humbled even from high places. The blessed ones explain this through the Purana. Thakkan's Velvi is a symbol of Saivism. It is written by Ottakkootha, who prefaces the velvi of Dakkana. This book highlights the influence of Saivism in those days. This article will examine the Thakkan Vellavi.*

**Keywords:** Religious, Male Dominance, Thakkan, Yajna.

## References

[1] Kamala Murugan K.R. *Thakkayagaparani.*Saratha Publishing, Chennai-14, 2016.
[2] Sundaramoorthi.K. *Thiruvarutpayan*. Dharumai Adina Pulavar Senthamil College, Pulavar Edition, Thirupanandal-1997.
[3] Thirugana Sambandar. *Thirugana Sambanda Devaram.* Dharumai Adina Publishing, Dharmapuram 1997.
[4] Thirunavukkarasar. Thirunavukkarasar (Appar) Devaram. Dharumai Adina Publishing, Dharmapuram, 1964.

**Author Contribution Statement:** NIL.

**Author Acknowledgement:** NIL.

**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 2, இதழ் - 1, கார்த்திகை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# தக்கன் வேள்வி

**சி. கல்பனா,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரி, தருமபுரம், மயிலாடுதுறை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-6010-8716
**முனைவர் மு. நவமணி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரி, தருமபுரம், மயிலாடுதுறை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-4803-3237
**DOI: 10.5281/zenodo.7397179**

**ஆய்வுச்சுருக்கம்**

*மனித சமூகத்தினைப் பக்குவப்படுத்தி வழிகாட்டுவது சமயமாகும். சமயக் கருத்துக்களை அறியாமையில் மூழ்கியிருக்கும் மக்களால் எளிதில் உணர முடியாது. ஆகையினால், எளிதாகக் கதைகளினால் விளக்குதல் வழக்கமாகும். அவ்வகையில் சைவ சமய உலகில் தக்கனின் வேள்வி சிறந்த சான்றாக உள்ளது. உயர்ந்த பக்தியும் அன்பும் ஆணவத்தினால் அழிந்து விட்டது என்பதனை எடுத்துரைத்து, எந்நிலையிலும் இறைவன் கருணையாளன் என்பதனை உணர்த்துவதேயாகும். சைவத்தின் எழுச்சிக்கு இக்கதையினை முன்னிறுத்தி சமய விழிப்புணர்வைத் தக்கயாக பரணியில் ஒட்டகூத்தர் ஏற்படுத்துகின்றார். மனிதமனம் தான் விரும்புவதையெல்லாம் பெற வேண்டுமென்று எண்ணக்கூடியது. அதனுடன் தானே பெரியவன் என்ற சிந்தனையுடையது. தன்னைத்தானே உயர்வாக எண்ணி அறியாமையில் மூழ்கி பிறவியை அறுக்கமுடியாமல், துன்புற்று கொண்டே இருக்கும் தன்மையுடையது. ஆகையினால் சைவசமயம் ஆணவ நீக்கத்தினை முதன்மைப் படுத்துகின்றது. ஆணவத்துடன் வாழ்பவர்கள் உயர்ந்த இடத்திலுருந்தாலும் தன்நிலைத் தாழ்ந்துவிடுவர். இதனை புராணத்தின் மூலம் விளக்குபவர் அருளாளர்கள். தக்கனின் வேள்வி சைவசமயத்தின் சிறப்பிடம் பெறுகின்றது. தக்கனின் வேள்வியை முன்னிறுத்தி பரணியும் ஒட்டக்கூத்தரால் எழுதப்பட்டுள்ளது. அன்றைய நிலையில் சைவத்தின் செல்வாக்கினை இந்நூல் எடுத்துரைக்கின்றது. தக்கனின் வேள்வி குறித்து இக்கட்டுரையானது ஆராயவுள்ளது.*

**குறிப்புச் சொற்கள்:** மனித தேடலின் பலன், சமயங்கள், ஆணவ நீக்கம், தக்கனின் ஆணவம், இறையருள்.

**முன்னுரை**

மனிதமனம் தான் விரும்புவதையெல்லாம் பெற வேண்டுமென்று எண்ணக்கூடியது. அதனுடன் தானே பெரியவன் என்ற சிந்தனையுடையது. தன்னைத்தானே உயர்வாக எண்ணி அறியாமையில் மூழ்கி பிறவியை அறுக்கமுடியாமல், துன்புற்று கொண்டே இருக்கும் தன்மையுடையது. ஆகையினால் சைவசமயம் ஆணவ நீக்கத்தினை முதன்மைப்

படுத்துகின்றது. ஆணவத்துடன் வாழ்பவர்கள் உயர்ந்த இடத்திலுருந்தாலும் தன்நிலைத் தாழ்ந்துவிடுவர். இதனை புராணத்தின் மூலம் விளக்குபவர் அருளாளர்கள். தக்கனின் வேள்வி சைவசமயத்தின் சிறப்பிடம் பெறுகின்றது. தக்கனின் வேள்வியை முன்னிறுத்தி பரணியும் ஒட்டக்கூத்தரால் எழுதப்பட்டுள்ளது. அன்றைய நிலையில் சைவத்தின் செல்வாக்கினை இந்நூல் எடுத்துரைக்கின்றது. தக்கனின் வேள்வி குறித்து இக்கட்டுரையானது ஆராயவுள்ளது.

**சமயம்**

மனிதன் இயற்கை வாழ்விலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு குழுவாக வாழத்தலைப்பட்டக் காலத்துத் தோன்றியத் தேடலினால் பல்வேறு வகையான விளக்கங்களைப் பெற்றான். அவ்விளக்கங்கள் பல நிலைகளில் வலுப்பெற்று சமயக் கொள்கைகளாக மிளிர்ந்தன. இத்தகையக் கொள்கைகள் சில நிலைத்து நின்றன. சில வலுவிழந்தன. மக்கள் சமூகத்தினை பக்குவப்படுத்துவதற்கான வழிமுறைகளை வரையறுத்துக் கொண்டு தங்களின் கொள்கைகளை மக்கள் அனைவரும் பின்பற்ற வேண்டுமென்ற முயற்சியினை மேற்கொண்டன. இதன் விளைவு சமயப் பரவல்களும் மற்றும் சமயப்பூசல்களாகும். தமிழகத்தில் நிலைபெற்றிருந்த சமயங்கள் சைவம், வைணவம், வைதீகம், பௌத்தம், சமணம் ஆகியனவாகும். இவை தங்களின் செல்வாக்கினை நிலைநிறுத்திக் கொள்ள போராடின. அதனால் சமயங்களுக்குள் போட்டிகளும் வளர்ந்தன. ஒரே சமயங்களுக்குள் பல பிரிவுகள் ஏற்பட்டன. சமயநிலையில் சமணம் மிக நீண்ட காலமாக கோலோட்சியமையினை அறியலாம். சைவ சமயமும் வைணவ சமயமும் தலையெடுத்த பொழுதும் சிக்கல்கள் இருந்து வந்தமையினை வரலாற்றினால் அறியமுடிகின்றன. சைவசமயத்துடன் அனைத்து சமயங்களும் சண்டையிட்டுள்ளன என்பதனை புராணங்களும் அடியவர்களின் அருட்பாமாலைகளும் சுட்டிக்காட்டுகின்றன. சைவத்திற்கும் வைதீக சமயத்திற்குமான பூசலினைத் தக்கனின் யாகமும் தாருகாவனது முனிவரிகளின் செயல்பாடுகளும் வெளிப்படுத்துகின்றன.

**வைதீக சமயம்**

வைதீகம் என்பது வேள்வி சடங்குகளை முன்னிறுத்தவதாகும். கடவுளர்கள் பலர் இருப்பினும் முழுமுதற்கடவுளர் எனவொருவரை கொண்டதல்ல. மனிதன் முயன்றால் கடவுள் தன்மையினைப் பெறலாம் எனக் கூறுவதாகும். வேள்வி சடங்குகளை சைவம் ஏற்றுக் கொண்டமையினை,

**வேத வேள்வியை நிந்தனை செய்து உழல்**
**ஆதம் இல்லி அமணொடு தேரரை**
**வாதில் வென்று அழிக்கத்திரு உள்ளமே**
**பாதிமாதுடன் ஆயிரமனே**
**ஞாலம்நின் புக ழேமிக வேண்டும் தென்**
**ஆலவாயில் உறையும் எம் ஆதியே (திருஞான சம்பந்த தேவாரம், பா. 3-108:1)**

எனும் பாடலில் சம்பந்தர் குறிப்பிடுகின்றார். உமையம்மையினை இடபாகத்தில் கொண்டுள்ள பரமனே, தென் ஆலவாயில் வீற்றிருந்தருளும் எம்முடைய ஆதி மூர்த்தியே, வேதத்தையும் வேள்வியையும் பழித்துத்திரியும் பயனற்றவர்களான சமண பௌத்தர்களை வாதில் வென்றழிக்க உம்மை வேண்டுகின்றேன். உமது திருவுளத்தான் யாதென்று அறியேன் உலகனைத்தும் உனது திருப்புகழே மிக திருவருள் புரிவீரராக என சம்பந்தர் சைவசமயத்தின் வழிபாட்டு முறையாக வேள்வியினைக் குறிப்பிடுகின்றார்.

சைவசமயத்தினைப் பொறுத்தவரையில் எந்தவொரு வழிபாட்டு முறையினையும் மேற்கொள்ளலாம். ஈசனே இறைவன் என முடிந்தமுடிபாக இறையினை ஏற்க வேண்டும். இதனை அறிந்து உள்ளன்புடன் ஒழுகினாலன்றி இறையருளைப் பெறுதல் இயலாது. இதனை,

**காலைசென்று கலந்து நீர் மூழ்கில் என்**
**வேலை தோறும் விதிவழி நிற்கில் என்**
**ஆலை வேள்வி அடைந்த அதுவேட்கில்**
**என் ஏல ஈசன் என்பார்க்கு அன்றி இல்லையே (திருநாவுக்கரசர் தேவாரம், பா. 5-99:5)**

என்கிறார் அப்பர். காலையில் எழுந்து நீராடி செய்ய வேண்டிய கருமங்கள் அனைத்தையும் செய்து வேள்விச்சாலையில் வேள்விகள் செய்து விட்டால் மட்டும் இறையருள் கிட்டாது. இறைவன் என்பவன் ஈசனே ஈசனன்றி வேறொரு இறையில்லை எனும் நிலையினை உணர்ந்தாலே இறையருள் கிட்டும். அதாவது இறையின் தன்மையினை உணர்வதற்கு உயிர்கள் தங்களின் பாசப்பிணைப்பினை நீக்கியிருக்க வேண்டும். பாசம் நீங்கினால்தான் உயிரின் தூயத் தன்மையினை அடையலாம். இப்பாசநீக்கத்தினையே இறையடியவர்கள் எடுத்துரைக்கின்றனர். புராணக் கதைகளின் மூலமாக இப்பாசநீக்கத்தின் அவசியத்தினை உணர்த்தினர். சைவசமய அடியவர்கள் ஆணவமலத்திற்கான அடையாளமாகத் தக்கனது வேள்வியினை சான்று காட்டியுள்ளனர்.

**தக்கன் வரலாறு**

தக்கன் பிரஜாபதிகளுள் ஒருவராவார் பிரம்மனின் மகனாவார். தவமிருந்து உமை தன் மகளாகப் பிறக்க வேண்டுமென்று வரத்தினைப் பெற்றார். வரத்தின் பலனாய் அம்மையும் மகளாக அவதரித்தார். தாட்சாயினியின் திருமண வயது வந்த காலத்தில், தக்கன் அறியாது, ஈசன் அம்மையினைத் திருமண செய்து கொண்டதும், தக்கனின் அனுமதியின்றி சிவபெருமான் அம்மையினைத் திருமணம் செய்து கொண்டார். ஆகையினால், தக்கனின் சிந்தனையுள் அதுவரையில் ஆட்சி செய்து வந்த பக்தியும் அன்பும் பணிவும் தடம் மாறியது. ஆணவத்தினை வெளிக்கொணர்ந்து வாழ்க்கைப் பாதையினை மாற்றியது.

ஆணவத்தினால் உயிர்களுக்கு தீங்கே ஏற்படுகின்றது. உயிர் தோற்றம் பெற்றக் காலம் முதல் இணைந்தே இருப்பதனால் அதனுடைய வெளிப்பாட்டினை உயிர்களால் அறிய ஒன்னாதாக உள்ளது. ஆணவத்தினை இருள்மலம் என்கின்றது சித்தாந்தம்.

**ஒரு பொருளும் காட்டாது இருள்உருவம் காட்டும்**
**இருபொருளும் காட்டாது இது. (திருவருட்பயன், பா. 3)**

என்கின்றது திருவருட்பயன். இருளானது பொருளை வெளிப்படுத்தவில்லையெனினும் தன்னை வெளிப்படுத்தி நிற்கும். ஆணவமோபொருளையும் தன்னையும் வெளிப்படுத்தாது. இத்தகைய ஆணவம் தக்கனின் சிந்தைக்கும் செயல்படத் தொடங்கியது. அதனால் தந்நிலை இழந்தான். ஈசனின் நிலையினை உணரத் தவறிவிட்டான். பிறரின் அறிவுரைகளையும் ஏற்க மறுத்து யாகம் செய்வதில் முனைப்புடன் இருந்தான். முனிவர்களின் துணை கொண்டு கங்கைக் கரையில் யாகத்தினைத் தொடங்கினான். இதனை,

***கங்கைமாநதி வீழ்புறத்தமது***
***கனகலத்தொருகளனிழைத்***
***தங்கண் வானவர் வருகவென்றனன்***
***முனிவர் தன் படையாகவே (தக்கயாகப்பரணி, பா. 247)***

என்கிறது தக்கயாகப்பரணி. சில முனிவர்களைத் தமக்கு துணையாகக் கொண்டு, கங்கையாற்றங்கரையில் அமைந்த கனகலம் என்பதான ஓர் இடத்தினில் வேள்விச்சாலையினை அமைத்து தேவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்தான். தக்கனின் அழைப்பினை ஏற்று தேவர்களும் இந்திரனும் வந்தனர்.

**பிரம்மனின் வருகை**

படைக்கும் தொழிலை செய்து வந்தாலும் பிரம்மனுக்கும் வேள்வியில் அவிர்ப்பாகம் வழங்குதல் உண்டு. அவிர்ப்பாகம் பெறுதலுக்காக தக்கனின் அழைப்பினை ஏற்று பிரம்மன் வேள்விச்சாலைக்கு எழுந்தருளினான். ஈசனில்லாத வேள்வியில் கலந்து கொள்ளச் சென்றமையினால் பிரம்மனின் அறிவு கலங்கிவிட்டது என்கின்றார் ஒட்டக்கூத்தர். இதனை,

**மைந்தரானசுரேசரோடசுரேசர் முன்வர மதிமருண்**
**டந்தணாளனு மலரில் வந்தனர் முனிவர் தன்புடை யாகவே (தக்கயாகப்பரணி, பா. 260)**

எனும் பாடலினால் அறியலாம். தம்முடைய பிள்ளைகளைப் போன்றவர்கான தேவர்களும் அவர்களுக்கு எதிரான இயல்புடைய அசுரர்களும் முன்னதாகவே கிளம்பிச் சென்றுவிட்ட காரணத்தினால் பிரம்மதேவன் மிகுந்த அவசரத்தில் தான் செல்ல வேண்டிய வாகனம் அன்னப்பறவை என்பதனையும் மறந்துவிட்டுத் தான் அமர்ந்திருந்த தாமரை மலரின் மீதேறி வந்துவிட்டான். சிவனுக்கு அழைப்பு விடுக்கவில்லை என்பதனை அறிந்தும் பிரம்மன் தக்கன் யாகத்திற்குச் செல்ல எண்ணியபோதே பிரம்மனின் மதியானது மருளத் தொடங்கிவிட்டது

என்பதனை எடுத்துரைக்கும் விதமாகவே தன் வாகனத்தினை மறந்ததாக ஒட்டக்கூத்தர் குறிப்பிடுகின்றார்.

**திருமால் வருகை**

திருமாலும் தக்கனின் வேள்விக்கு செல்கின்றார். சிவன் வேள்விக்குக் கலந்து கொள்ளாமையினால், வேள்வியின் தலைவனாக விளங்கலாம் எனும் சிந்தனையுடன் வேள்வியில் கலந்து கொண்டார்.

**வலங்கு மீருரு வண்ணக்கலுழன் மேல்**
**வளரும் பாற்கடல் பாழ்பட வந்தனன்**
**இயங்குமேரு கிரிச்சிக ரத்திலோ**
**ரீந்த்ர நிலிகிரிபோன்றிருப்பவே (தக்கயாகப்பரணி, பா. 286)**

எனும் பாடலினால் திருமாலின் வருகை சுட்டிக் காட்டப்படுகின்றது. வெண்மையும் செம்மையும் ஆகிய இருநிறத்தினையும் உடைய கருட வாகனத்தின் மீதேறி திருமால் வந்த காட்சியானது, பொன்மலையின் சிகரத்தில் இந்த நீலமலை வந்ததனைப் போன்று காட்சி தந்தது. இவ்வாறு பாற்கடல் பாழ்கடலாய்த் தனித்து நிற்கும் படியாக அதனை விட்டுவிட்டு விலகி வந்து திருமால் தக்கனின் வேள்விச்சாலையினைச் சார்ந்தார்.

**உமையின் நிலை**

தேவர்கள் அனைவரும் எங்கு செல்கின்றார்கள் என்பதனை உமை அறிந்தபோது வருந்துகின்றாள். பெண்ணின் தந்தையை மதித்து திருமணம் செய்து கொள்ளாத ஈசனை நானும் மதியேன் என்ற செருக்கினால் தக்கனின் செயல் இருந்தது. தன்னையும் ஈசனையும் புறந்தள்ளி மற்றவர்களுக்கு அழைப்பு விடுத்தமை தவறு என்பதனை சுட்டிக்காட்டி நேர்வழிப்படுத்த எண்ணினாள் அன்னை. தான் உலக உயிர்கள் அனைத்திற்கும் அன்னை என்பதனை மறந்து தக்கனின் மகள் என்ற நினைவே முன்னின்றது.

**இப்பரிசு வேள்விபுரி தாதைசெய லெல்லாம்**
**ஒப்பரிய நாயகியுணர்ந்தன ளுணர்ந்தே (தக்கயாகப்பரணி, பா. 287)**

எனும் பாடலின் மூலம் அறியலாம். தன்னுடைய தந்தையாகிய தக்கன் தங்களை மதித்து அழைக்காமல் தானே யாகத்தினை நிகழ்த்துவதனைக் கண்டு வருந்திய உமையம்மை தான் மட்டும் வேள்விச் சாலைக்குச் செல்லக் கருதி இறைவனிடம் விடை தந்தருள என்றார். இறைவனும் விடைதந்தருளினார் தேவி வேள்விச் சாலைக்குச் சென்றார்.

**காதலனை விட்டவ ளெழுந்தருள வுங்கண்**
**டேதில ரெனத்தம ரிருந்தன ரிருந்தே (தக்கயாகப்பரணி, பா. 247)**

தக்கனின் மகளாக அன்று ஈசனின் மனைவியாக சென்ற உமையினை யாரும் கண்டுகொள்ளவில்லை. அவர்களின் தவறினை சுட்டிக்காட்டியும் ஏற்பாரின்மையினால்

கோபம் கொண்டு வேள்வி அழிந்து விடும் எனக் கூறி அங்கிருந்து புறப்பட்டாள் அன்னை. இதனை,

**இழைப்பா யிழைப்பா யினியாகம்**
**பிழைப்பாய் பிழைப்பாய் பிதாவே (தக்கயாகப்பரணி, பா. 297)**

எனும் பாடலினால் அறியலாம். அன்னை, தக்கனை நோக்கித் தந்தையே இனி நீ வேள்வியினைத் தொடர்ந்து நடத்தி முடித்திருவாயாக என்று வாழ்த்தினாள். இவ்வாழ்த்து மறைமுகமாக வேள்வி முழுமைப் பெறாது என்பதனை குறிப்பிடுகின்றது. வேள்விச் சாலையிலிருந்து புறப்பட்ட அன்னை தன் நிலையினை இறைவனிடம் முறையிடுகின்றாள். இறைவனோ அன்னை கோபத்தில் கூறும் செய்தியினை கேட்டும் பதில் கூறாது அமைதி காத்தார். அதனால் சினம் கொண்ட அன்னை இறைவனை விட்டுப் பிரிந்தாள். இதனை,

**கரந்தபாகமு நின்றபாகமும் வேறு கொண்டமை காதலால்**
**புரந்தபாகமு மவற்கு விட்டிம யம்புகத் தனிபோகவே (தக்கயாகப்பரணி, பா. 327)**

எனும் பாடலில் குறிப்பிடுகின்றார் ஒட்டக்கூத்தர். இறைவன் தேவிக்குப் பதில் கூறாமையினால் தன்னை அவமதிப்பதாக எண்ணிய இறைவி உமையொருபாகனாகியத் தோற்றத்திலிருந்துத் தம்முடைய ஒரு கூறினைப் பிரித்துக் கொண்டு தனியே இமயமலை நோக்கிச் சென்றாள்.

**ஈசனின் மறக்கருணை**

இறையருள் காட்டுகின்ற நன்னெறியிற் செல்வோரை அறக்கருணை காட்டி ஆட்கொள்கின்றான் ஈசன். அந்நெறியில் வழுவாதவர்களை மறக்கருணையின் மூலமாகவே ஆட்கொள்கின்றான். இதனை,

**ஓதுவித்தாய் முன் அறவுரை காட்டி அமணரொடே**
**காதுவித்தாய் கட்ட நோய்பிணி தீர்த்தாய் கலந்தருளிப்**
**போதுவித்தாய் நின் பணிபிழைக்கில் புளியம் வளாரால்**
**மோதுவிப்பாய் உகப்பாய்முனி வாய்கச்சியே கம்பனே. (திருநாவு. தேவாரம், 4-99:1)**

என்கிறார் அப்பர். அவரவர்களின் தன்மைக்கேற்ப அருளும் திறத்தினனாக விளங்குகின்றார். தேவர்களின் அறியாமையினை நீக்க வேண்டுமென எண்ணினார் இறைவனை,

**விண்ணவர் கண்மேலு மயன் மேலுமரிமேலும்**
**கண்ணுதன் முதற்கடவு ளுங்கருணை வைத்தே (தக்கயாகப்பரணி, பா. 289)**

எனும்பாடலில் இதனை சுட்டுகின்றார் ஒட்டக்கூத்தர். தேவர்கள் மீதும் பிரம்ம தேவன் மீதும் திருமால் மீதும் கருணை கொண்டு அவர்களுக்கு அறிவும் உணர்வும் கற்பிக்க வேண்டும் என்று நினைத்தார் சிவபெருமான். தேவித் தன்னைவிட்டுப் பிரிந்தமையால் தன் அமைதியை இழந்த ஈசனின் தோற்றம் கோபத்துடன் மட்டுமே இருந்தது.

**விட்டபாகம் வலிந்து கண்டனர்**

**வேறுகண்டிலர் மெய்ப்படப்**

**பட்டபாக மிரண்டுமங்கவ**

**ரில்லையன்று படாதவே (தக்கயாகப்பரணி, பா. 328)**

என்னும் பாடலினால் அறியலாம். அமைதியின் வடிவமாகிய உமையானவள் தன்னை விட்டுப் பிரிந்த காரணத்தினால் சிவன் கோபத்தின் ஒட்டு மொத்த வடிவமாகவே மாறிவிட்டார். பார்ப்பவர்கள் அனைவரும் இருவேறுபட்ட உருவங்களைக் காண முடியாத நிலையில் ஒரே வடிவமாக நின்றார். அவர் திருமேனி முழுவதும் அமைதியின் கூறு ஏதுமின்றிக் கோபத்தின் கூறே பரவியிருந்தது. ஈசன் நெற்றிக்கண்ணை திறந்ததும் வீரபத்திரரின் தோற்றம் நிகழ்ந்து. வீரபத்திரரைக் கண்டதும் தக்கனின் வேள்வியினை அழித்து விட்டு வரும்படி கூறினார். இதனை,

**நின்ற வீரனை மாமன் வேள்வி தகர்க்க வென்று நெடுஞ் சிலைக்**

**குன்ற வீரர் பணித்தலும் பணியாமல் வந்தன களையே (தக்கயாகப்பரணி, பா. 335)**

எனும் பாடலினால் அறியலாம். வீரபத்திரருடன் பூதகணங்களும் போருக்குச் சென்றன. வேள்விச்சாலை நோக்கி வீரபத்திரரின் படைப் புறப்பட்டது. வேள்விச்சாலையின் பூதகணங்கள் நுழைந்து வேள்வியைத் தடை செய்தன. வீரபத்திரர் பிரம்மன், திருமால், தேவர்களை அழித்தார். இதனை,

**தக்கனது பெருவேள்வி சந்திரன் இந்திரன்**

**எச்சன் அருக்கன் அங்க**

**மிக்க விதாதவினொரும் விதிவழியே**

**தண்டித்த விமலா கோயில் (திருஞான சம்பந்த தேவாரம், பா. 1405)**

என சம்பந்தர் தேவாரத்தில் தக்கன் வேள்வியினைக் குறிப்பிடுகின்றார். தக்கன் வேள்வி சிதைத்தமையினை தமது பாடல்களில் பாடியுள்ளார்.

தேவர்கள், பிரம்மன், திருமாலின் நிலையினைத் தனித்தனியே தக்கயாகப்பரணிக் குறிப்பிடுகின்றது.

**பொன்முக மொன்று பண்டு**

**போனது புகுதப் பொன்றித்**

**தன்முக மைந்தும் பெற்ற**

**சதுமுகப் போயைப் பாராய் (தக்கயாகப்பரணி, பா. 381)**

எனும் பாடலில் பிரம்மன் இறந்து பேயாக இருக்கும் காட்சியினை தேவிக்கு காட்டுகின்றார். போர்க்களத்தில் தேவர்களைக் கண்டதும். இறைவியின் கோபம் தணியுமாறு வேண்டினாள். இறைவனும் கோபம் தணிந்து தேவர்கள், பிரம்மன், திருமாலை உயிர்ப்பித்தார்.

**ஒழிந்த வானவர்கட் கெல்லா**

**முயிருந்தம் முடம்பு நல்கி**

**அழிந்தவானுலகுந் தங்கள்**
**பதங்களு மளிப்பக் கொண்டே (தக்கயாகப்பரணி, பா. 798)**

எனும் பாடலில் குறிப்பிடுகின்றார் ஒட்டக்கூத்தர். மடிந்த வானவர்கள் அனைவருக்கும் உயிரும் உடலும் மீண்டும் கிடைக்கும்படி செய்த இறைவன், அழித்த வானுலகத்தினையும் அவர்களுடைய பதவிகளையும் முன்பு இருந்ததனைப் போன்று அளித்தருள் செய்தான்.

**தக்கனுக்கருளியமை**

தக்கன் பக்தியில் சிறந்து விளங்கினாலும் ஆணவம் அவனின் ஞானத்தினை மறைத்து அறியாமைக்குள் ஆழ்த்திவிட்டது. அதனாலேயே, ஆட்டின் தலையினை தக்கனுக்கு வழங்குகின்றார். இதனை,

**மிக்கன பேசித் தம்மை**
**வேள்வியி லகழ்ச்சி செய்த**
**தக்கனை முதிய மோத்தைத்**
**தலைபெற வருளிச் செய்தே (தக்கயாகப்பரணி, பா. 797)**

எனும் பாடலால் அறியலாம். ஆணவத்துடன் அதிகமாகப் பேசித் தன்னை வேள்வியில் இழிவு படுத்திய தக்கனுக்கு, அவன் யாகத்தில் கொண்டு வந்த ஆடுகளில் ஒன்றன் தலையை எடுத்துப் பொருத்தி உயிர்ப்பெற்றான்.

**தக்கன்சிரம் ஒன்றினை அரிவித்து அவன் தனக்கு**
**மிக்க வரம் அருள் செய்த எம் விண்ணோர் பெருமான் (திருஞான. தேவாரம், 1-8:2)**

என சம்பந்தர் குறிப்பிடுகின்றார்.

**முடிவுரை**

சைவ இலக்கியங்கள் ஈசனின் புகழினையும் அடியவர்களுக்கு அருளும் திறத்தினையும் குறிப்பிடுகின்றன. அடியவர்கள் தக்கனின் வேள்வி சிதைத்தமையினை முக்கியப்படுத்துகின்றன. எவ்வளவு உயர்ந்த நிலையிருப்பினும் ஆணவம் வந்துற்றதும் அறியாமையில் மூழ்கி துன்புறுதலை எடுத்துக்காட்டுவதற்கு தக்கனின் யாகம் சிதைத்தல் சிறந்த சான்றாகத் திகழ்கின்றது. சிவனை எதிர்த்தோரின் நிலையினை அறிவதற்கும் உறுதுணையாகத் திகழ்கின்றது.

**குறிப்புகள்:**

[1] கமல முருகன் கே.ஆர். *தக்கயாகப்பரணி.* சாரதா பதிப்பகம், சென்னை-14, 2016.

[2] சுந்தரமூர்த்தி.கே. *திருவருட்பயன்.*தருமை ஆதின புலவர் செந்தமிழ் கல்லூரி, புலவர் பதிப்பு, திருப்பனந்தாள்-1997.

[3] திருஞான சம்பந்தர். *திருஞான சம்பந்த தேவாரம்.* தருமை ஆதின பதிப்பகம், தருமபுரம், 1997.

[4] திருநாவுக்கரசர். திருநாவுக்கரசர் (அப்பர்) தேவாரம், தருமை ஆதின பதிப்பகம், தருமபுரம்,

1964.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.